முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பிங்களமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.05.2019, திங்கட்கிழமை

1. **தருமபலம் கொண்ட அரங்கனே**
**தரணியில் உலக மக்களின்**
**கருமவினை வென்று காத்திட**
**கல்கி அவதாரமாக வந்த தேசிகனே**
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிக்க **விகாரி தகர் திங்கள்**
**ஆசிபட முப்பான்திகதி சோம வாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 30ம் நாள் 13.05.2019, திங்கட்கிழமை)**
**அருளுவேன் நித்ய பிரசன்ன ஆசியை**
3. **ஆசியை பிங்கள முனிவர் யானும்**
அருளுவேன் உலகோர் நலம் பெற
ஆசிபட அரங்க ஞானி காட்டும்
அருள் நெறிகள் தனை ஏற்று
4. ஏற்றுமே மக்களெல்லாம் வருக
இணைந்து தருமத்தில் உதவி
ஆற்றல் தரும் ஞானிகள் பூசையை
அனுதினமும் செபமாக செய்து
5. செய்துமே சுத்தநெறியெனும்
சன்மார்க்க நெறி பிறழாது
மெய்ஞான வாழ்வாக வாழ
மக்களெல்லாம் ஞானவான்கள் ஆவர்
6. ஆவரே அரங்கன் தவசக்தி
அனைவரும் அடைந்து சிறந்து
புவனம்தனை ஞானயுகமாக்கும்
புண்ணிய பலம் அடைந்து நிற்பர்
7. நிற்கவே நிலைத்தன்மை காண
நிலவுலகம் தன்னில் மக்கள்
ஏற்பு கொண்டு ஆறுமுகனார்
ஏழாம் படை வீடு வந்து வணங்கி
8. வணங்கி முருகா அரங்கா எனும்
வல்லமையான செபம்தனை
இணங்கி நித்ய உருவாகவே
எண்ணிக்கை அஸ்டோத்ரம் குறையா
9. குறையா வழிபாடு தொடர
குருராசன் தலைமை ஏற்க
நிறைவான தருமம் பெருக்க
நிலவுலகோர்க்கு மனபக்குவமும்

10. பக்குவமுடன் பரோபகாரமும்
பணிவும் நீதி நேர்மையும்
ஆக்கமும் குறையா மக்களாகி
அனைவரும் ஞானவான்கள் ஆவர்

11. ஆவரே அரங்கன் ஞானபலத்தால்
அகிலமதை மாற்றம் செய்து
யாவரும் ஞானிகள் ஆவர்
இனிதே ஞானயுகம் படைப்பர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பிங்களமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களைச் செய்து தருமபலம் கொண்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் உலக மக்களின் கர்மவினைகளை வென்று காத்து ரட்சித்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 30ம் நாள் 13.05.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பிங்களமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பிங்களமுனிவர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் அற்புதமான ஞான அருள்நெறிகள் தன்னை உலக மக்கள் ஏற்று பின்பற்றி வருவதுடன் அரங்கனின் அறப்பணிகளில் அவரவரும் இணைந்து அரங்கனின் தர்மத்தில் உதவிகள் செய்தும் பொருளுதவிகளைச் செய்தும் வருவதுடன் தினம்தினம் மறவாமல் ஞானிகள் திருவடிகளைப் பற்றி பூஜைகளை செய்து அரங்கனின் தூய நெறியாகிய சுத்த சன்மார்க்க நெறியினை பிறழாது ஏற்று அவரவரும் வாழ்வினை மெய்ஞான வாழ்வாக வாழ்ந்து வர, அவர்களெல்லாம் உலகினில் ஞானவான்களாக ஆகிடுவர்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தவசக்தியினை அனைவரும் அடைந்து சிறந்து விளங்கிட உலகினில் ஞானபலம் பெருகி உலகமே ஞானயுகமாக மாறிடும், மக்களெல்லாம் புண்ணியபலம் அடைந்து சிறப்படைவார்கள்.

உலக மக்களெல்லாம் நிலைத்தன்மையாகிய பிறவா பெருநிலையை அடைந்திட உலக மக்களெல்லாம் அரங்கனின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு அரங்கமகா தேசிகனாரை குருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கன் வாழும் ஞானபீடமாம் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து அரங்கமகானை பயபக்தியுடன் வணங்கி ஆசி பெற்று தீட்சை உபதேசம் அடைந்து வல்லமைமிக்க ஜெபங்களான முருகா, அரங்கா எனும் நாமஜெபத்தினை மனம் உருகி மனம் விரும்பி தினம்தினம் மறவாமல் 108 முறையேனும் ஜெபித்து வழிபாடுகளைத் தொடர்ந்து செய்து வருவதுடன் குருராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தலைமையை ஏற்றுக் கொண்டு தர்மங்களை தாராளமாய் செய்து வருவதுடன் அரங்கனை பின்தொடர்ந்து வர, உலக மக்களுக்கு மனப்பக்குவம் பெருகிடும் பரோபகார குணம் பெருகிடும், பணிவும், நீதியும், நேர்மையும் அதிகமாகி ஆக்கமும் ஊக்கமும் குறையற்ற மக்களாகி சிறப்படைந்து அனைவரும் ஞானவான்கள் ஆவார்கள். ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானபலத்தினால் உலகினை மாற்றம் செய்து யாவரும் ஞானிகள் ஆவார்கள் இனிதே ஞானயுகம்தனை படைப்பார்கள் எனக் கூறுகிறார் மகான் பிங்களமுனிவர்.

–சுபம்–